# BSNL ஊழியர் சங்கம்

## தேசிய தொலை தொடர்பு ஊழியர் சம்மேளனம்

### தமிழ்நாடு தொலை தொடர்பு ஒப்பந்த தொழிலாளர் சங்கம்

### தமிழ் மாநில தொலை தொடர்பு ஒப்பந்த் தொழிலாளர் சங்கம்

### தமிழ் மாநில சங்கங்கள்

**தேதி:-13.06.2015**

## ஒன்று பட்ட போராட்ட அறைகூவலுக்கு கிடைத்த வெற்றி!!!

அன்பார்ந்த தோழர்களே,

08.06.2015 அன்று மாநில நிர்வாகத்துடன் ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் 12.06.2015 அன்று மீண்டும் பேச்சு வார்த்தை நடைபெற்றது. BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக தோழர் S.செல்லப்பா AGS., தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் CS, TNTCWU சார்பாக அதன் உதவி மாநில செயலாளர் தோழர் C.பழனிச்சாமி, NFTE சங்கத்தின் சார்பாக தோழர் R.பட்டாபி CS மற்றும் தோழர் G.S.முரளிதரன் ACS மற்றும் TMTCLU சார்பாக மாநில செயலாளர் தோழர் R.செல்வம் ஆகியோரும் பேச்சு வார்த்தையில் கலந்துக் கொண்டனர். நிர்வாகத்தின் சார்பில் தலைமை பொது மேலாளர் திரு C.V. ரெட்டி அவர்களும், திருமதி பூங்குழலி PGM(O), திரு ரவி PGM(F), திரு ரவி பாபு GM(HR) மற்றும் திரு M.ராஜி DGM(A) ஆகியோரும் கலந்துக் கொண்டனர். இந்த பேச்சு வார்த்தை மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. நமது ஒன்றுபட்ட போராட்ட அறைகூவல் காரணமாக மாநில நிர்வாகத்தின் பெரிய அதிகாரிகள் அனைவரும் ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனையில் நமது உணர்வுகளை புரிந்துக் கொண்டுள்ளனர் என்பது பேச்சு வார்த்தையில் தெளிவானது. இதில் கீழ்கண்ட முடிவுகள் எட்டப்பட்டன:-

1) **ஒப்பந்த ஊழியர்கள் ஊதியம்**:- 7ஆம் தேதிக்குள் ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதியம் கிடைக்கவில்லை என்றால் சட்ட பிரிவு எண் 21(4) படி நிர்வாகமே ஊதியம் வழங்க வேண்டும் என நாம் வலியுறுத்தியுள்ளோம். ஒப்பந்த ஊழியர்களுக்கு பிரதி மாதம் 7ஆம் தேதிக்குள் ஊதியம் வழங்குவதை மாவட்டங்களில், அதற்காக நியமிக்கப்படுகின்ற அதிகாரிகள் உத்தரவாதம் செய்வார்கள். மாவட்டங்களில் இருந்து ஒப்பந்ததார்ரகளின் பில்களை பிரதி மாதம் 2ஆம் தேதிக்குள் மாநில அலுவலகத்திற்கு அனுப்பவும், 5ஆம் தேதிக்குள் மாநில நிர்வாகம் அவர்களுக்கு பணம் அனுப்புவதை உறுதி செய்யவும் வலியுறுத்தினோம். மாவட்டங்களில் இருந்து பில்கள் குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்புவதை மாவட்ட சங்கங்கள் உறுதி செய்ய வேண்டும். பின்னர் ஒப்பந்த தாரர்களின் பில்களை மாநில அலுவலகத்திற்கு அனுப்பிய பின் அந்த டாகுமெண்ட் எண்ணை குறித்து, அது ஒப்பந்த ஊழியர்களின் ஊதியத்திற்கானது என மாநில நிர்வாகத்திற்கு தனியாக குறிப்பு அனுப்பினால் அதனை தாமதமின்றி செட்டில் செய்ய PGM(F) உறுதி அளித்துள்ளார். மேலும் ஒப்பந்த ஊழியர்களுக்கு ஊதியப் பட்டியலை வழங்க ஒப்பந்ததாரருக்கு வழிகாட்டவும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.
2) **EPF:-** ஒவ்வொரு ஒப்பந்த ஊழியருக்கும் E-PASS BOOKகினை மாவட்டத்தில் உள்ள பொறுப்பான அதிகாரி எடுத்துக் கொடுப்பார். ஒவ்வொரு ஒப்பந்த ஊழியரின் பெயரில் EPF பணம் கட்டப்படுகின்றதா என்பதை உறுதி செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக மாநில நிர்வாகம் தெரிவித்தது. ஒப்பந்த ஊழியர்களின் EPF பணத்தை

அவர்கள் பணியாற்றக்கூடிய பகுதிகளில் உள்ள EPF அலுவலகங்களிலேயே ஒப்பந்ததாரர் கட்ட வேண்டும் என வலியுறுத்தி உள்ளோம். நிர்வாகம் அதனையும் அறிவுறுத்துவதாக ஏற்றுக் கொண்டுள்ளது.

3) **ESI CARD:-** ESI CARD வழங்கப்படாதவர்களுக்கு உடனடியாக அதனை எடுத்து கொடுக்க ஒப்பந்ததாரர்களை கட்டாயப்படுத்தி எடுத்து தர நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.
4) **BONUS:-** டெண்டரில் குறிப்பிட்டுள்ள படி சட்டப்படியான BONUSஐ கொடுக்க வைக்க ஒப்பந்ததாரர்களை நிர்வாகம் கட்டாயப்படுத்தும் என நிர்வாகம் ஏற்றுக் கொண்டுள்ளது.
5) **அடையாள அட்டை:-** ஒப்பந்த ஊழியர்களுக்கு ஒரு மாத காலத்திற்குள் அடையாள அட்டையை ஒப்பந்த தாரர் வழங்க வேண்டும். அதனை BSNL அதிகாரிகள் COUNTERSIGN செய்ய வேண்டும் என்று நாம் வலியுறுத்தினோம். ஒப்பந்ததாரர்களை வலியுறுத்தி விரைவில் ஒப்பந்த ஊழியர்களுக்கு பொறுத்தமான முறையில் அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என நிர்வாகம் பதிலளித்துள்ளது.

பல இடங்களில் ஒப்பந்த ஊழியர்கள் தங்களின் EPF பணத்தை வருடம் ஒரு முறை முழுமையாக எடுத்துக் கொள்வதாக நிர்வாகம் தெரிவித்தது. அது தொடர்ச்சியாக இல்லாமல் வருடம் ஒரு முறை எடுக்கும் பட்சத்தில் அவர்களுக்கான சட்ட பூர்வமான ஓய்வூதியம் உள்ளிட்ட பலன்கள் நிராகரிக்கப்படும் என்பதை சுட்டிக்காட்டி அத்தகைய போக்கினை நிர்வாகம் ஊக்குவிக்க கூடாது என நாம் கேட்டுக் கொண்டோம். அதனை நிர்வாகம் ஏற்றுக் கொண்ட்து. நமது ஒப்பந்த ஊழியர்களும் இதனை ஏற்றுக் கொள்ளக்கூடாது என நாம் கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகம் மேலும் நம்மிடம் 9 to 7 இலவச அழைப்புகள் திட்டத்தினை பயன்படுத்தி BSNLன் லேண்ட் லைனை அதிகரிக்க ஒத்துழைக்க வேண்டும் என்றும், FAULT DURATIONஐ கணிசமாக குறைக்கவும், வருவாயை அதிகரிக்கவும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக் கொண்டது. நாம் எங்கள் அகில இந்திய மற்றும் மாநில FORUMகளின் முடிவுகளை அவர்களிடம் தெரிவித்து நாங்களும் ஒத்துழைக்க தயாராக உள்ளோம் என்பதை உறுதி கூறி வந்துள்ளோம்.

ஒப்பந்த கோரிக்கைகளை வென்றடைய உறுதியாக செயல்பட்ட மாவட்ட சங்கங்களுக்கு பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்வதோடு, அக்கறையுடன் பேச்சு வார்த்தையில் கலந்துக் கொண்டு தீர்வு காண உறுதி அளித்துள்ள மாநில நிர்வாகத்திற்கு எங்களின் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

மேலும் நிர்வாகத்தின் வேண்டுகோள் மட்டுமல்ல, நமது வாழ்வாதாரத்தை வலுப்படுத்திக் கொள்ள 9 TO 7 திட்டத்தையும், இலவச ரோமிங் திட்டத்தையும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து BSNLன் புத்தாக்கத்திற்கு நமது பணிகளை சோர்வின்றி, உற்சாகமாய் ஆற்றுவோம். BSNLஐ பாதுகாப்போம். தேசத்தை பாதுகாப்போம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

| | | | |
|---|---|---|---|
| **A.பாபு ராதாகிருஷ்ணன்** | **R.பட்டாபிராமன்** | **C.வினோத்குமார்** | **R.செல்வம்** |
| **மாநில செயலாளர்** | **மாநில செயலாளர்** | **மாநில செயலாளர்** | **மாநில செயலாளர்** |
| **BSNLEU** | **NFTE BSNL** | **TNTCWU** | **TMTCLU** |